Subscription Rs 1 50
Postage to Ceylon & India 50
do Straits 75

# THE Hindu Organ

Advertising charges per line 10
do per half col Rs 3 00
do per Column 5 00

VOL X. ௧0-ம் புத்தகம் | JAFFNA, WEDNESDAY MARCH 15, 1899 | இந்துசாதனம். | கலியுகவருஷம் ௫000. [illegible] | NO. 15 இல ௧௫

PUBLISHED EVERY OTHER WEDNESDAY. பக்ஷத்துக்கொருமுறை புதன்கிழமைகளிற் பிரசுரிக்கப்படும்.

## TO OUR SUBSCRIBERS

We would earnestly entreat all our subscribers in arrears, to remit their dues at once. Although the paper was prized as low as possible, and any surplus income from it was to be devoted towards a noble cause, we regret very much to have to complain that owing to the remissness of our subscribers, we have not been able to carry out even the necessary reforms in the paper. Still we hope that better times are in store for us, and that all our subscribers would promptly pay up their arrears and subscribe to the proposed new series of the Hindu Organ.

*The Manager*

## SUBSCRIBE
TO
THE *HINDU ORGAN*
**ENGLISH WEEKLY**
AND
**TAMIL FORTNIGHTLY**
**EDITIONS**
TO BE
PUBLISHED SHORTLY

**All surplus income from the paper will be devoted to further the Educational work of the Sabhai.**

### FOR PATRONS

| | Rs. Cts. | |
|---|---|---|
| Jaffna Town per annum | 10-00 | and upwards |
| Outstations and India | 11-00 | do |
| Straits Settlements | 12-00 | do |

Fortnightly Tamil, and weekly English, editions of the *Hindu Organ* will be sent free to patrons for one year.

### FOR SUBSCRIBERS.

| | Tam. Ed: Rs-Cts. | Eng: Ed: Rs-Cts. | Both Ed: Rs Cts. |
|---|---|---|---|
| Jaffna Town per annum | 1-50 | 3-00 | 4-00 |
| Outstations and India | 2-00 | 4-00 | 5-50 |
| Straits Settlement | 2-25 | 4-50 | 6-25 |

*The Manager*

## Ceylon Technical College, Colombo

DEPARTMENT OF TELEGRAPHY AND ELECTRICAL ENGINEERING.

*Entrance Examinations.*

An Entrance Examination for admission of students to the above Department of the Technical College will be held in Colmbo at the College on Wednesday, March 22, and following days, commencing at 10.30 A. M. The examination will be held in Jaffna on Wednesday, April 5, and following days, commencing at 10 30 A. M. each day.

Forms of application containing all particulars can be obtained from the Superintendent of the College, Colombo, and from the Government Agent, Jaffna.

Candidates who intend coming to Colombo to be examined will forward those forms to the Superintendent of the College before March 22, and those who wish to attend the Jaffna examination will forward the forms to the Government Agent, Jaffna, before April 5,

There are upwards of forty vacancies to fill at the Technical College in this Department of it. Those who are admitted as students and pass the course and gain the diploma will be eligible for selection to appointments in the Post Office and Railway Departments of Government Service.

N. B.—Entrance Examinations for the Civil and Mechanical Engineering Departments of the College will be held after Easter on dates which will be duly announced.

E, HUMAN
Superintendent

Colombo, February 13, 1899.

## POST OFFICE NOTICE

Applications for the post of supervisor of Mails between A. Mannar and Vavoniya and B. Mankulam and Mullativu will be received at the General Post Office up to the 30th March. Security required Rs 250- 00, Salary Rs 30 00 a mouth. Applications should be addressed to the Postmaster General.

C. E. D. PENNYCUICK.
Postmaster General &
Director of Telegraphs

Postmaster Generals office,
Colombo 4th March 1899.

## CEYLON TECHNICAL COLLEGE COLOMBO

Applications are invited for the post of Assistant Instructor of Applied Mathematics. The holder of the post will be required to assist also as Demonstrator in Experimental Mechanics.

Preference will be given to an applicant who has passed a creditable course at a Technical College (Civil or Electrical or Mechancial) and has been engaged in teaching Mathematics.

The duties of the post include teaching Elementary Mathematics, as well as more advanced Algebra, Trigonometry, and Analytical Geometry for practical application in Engineering and Surveying.

The salary of the post is Rs 1,100 per annum, rising by periodical increments to Rs 1.760.

Application with full particulars to be forwarded to the Superintedent of the College not later than March 29.

E. HUMAN
Superintendent

Colombo, March 6 1899

## STANTON AND CO: VEPERY, MADRAS.

European and *Native* jewellery manufacturers, Diamond and ruby merchants, Designs and estimates on application. Dont waste time to write or cable us "can you do this or that" we can do anything that comes within reason and depends upon brains and money and close application to business

SATISFACTION GUARANTEED

## IN THE DISTRICT COURT OF JAFFNA.

ORDERNISI.

Testamentary Jurisdiction } No. 961

In the Matter of the Estate of the late Chelvanayakam wife of Ponnampalam of Charasalai.

Deceased.

Thiagar Ponnampalam of Charasalai

Petitioner,

Vs

1. Nagattaippillai widow of Chittampalam of Charasalai
2. Velaiyutar Kumaru of Do and his wife
3. Parupatham of Do

Respondents.

This matter of the Petition of Thiagar Ponnampalam of Charasalai praying for Letters of Administration to the estate of the abovenamed deceased Chelvanayakam wife of Ponnampalam of Charasalai coming ou for disposal before C. Eardley Wilmot Esquire, District Judge, on the 20th day of February 1899 in the presence of Messrs Casippillai & Cathiravelu Proctors on the part of the Petitioner and affidavit of the Petitioner dated the .17th day of February 1899 having been read, it is declared that the Petitioner is the lawful husband of the said intestate and is entitled to have Letters of Administration to the estate of the said Intestate issued to him unless the Respondent or any other person shall on or, before the 10th day of April 1899 show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

Signed this 20th day of February 1899
Signed/ . EARDLEY WILMOT
District Judge.

## IN THE DISTRICT COURT OF JAFFNA.

ORDER NISI

Testamentary Jurisdiction } No. 962

In the Matter of the Estate of the late Santiaguppillai Nicholappillai of Karaiyoor

Deceased.

Kaithampillai Manuvatpillai of Karaiyoor

Petitioner.

Vs

Nallatamby Nagalingam of Karaiyoor

Respondent

This matter of the Petition of Kaithampillai Manuvatpillai of Karaiyor praying for Letters of Administration to the estate of the abovenamed deceased Santiagopillai Nicholappillai coming on for disposal before C. Eardley Wilmot Esquire, District Judge, on the 20th day of Frbruary 1899 in the presence of Messrs Casippillai & Cathiravelu Proctors on the part of the Petitioner and affidavit of the Petitioner dated the 16th day of February 1899 having been read, it is declared that the Petitioner is husband of the creditor of the said intestate and is entitled to have Letters of Administration to the estatate of the said intestate issued to him unless the Respondent or any other person shall on or, before the 10th day of April 1899 show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

Signed this 20th day of Febrnary 1899
Signed/ C, EARDLEY WILMOT
District Judge.

## IN THE DISTRICT COURT OF JAFFNA.

ORDERNISI.

Testamentary Jurisdiction } No. 963

In the Matter of the Estate of the late Teivar Kantaiyar of Point Pedro

Deceased.

Appakkuddy Kanapathippillai of Point Pedro.

Petitioner.

Vs

1. Sithamparappillai Mailvaganam and
2. wife Kathirattaipillai and
3. Vyramuttu Kanapathippillai all of Point Pedro

Respondents.

This matter of the Petition of the abovenamed Petitioner praying for Letters of Administration to the estate of the abovenamed deceased Teivar Kantaiyar of Point Pedro coming on for disposal before C. Eardley Wilmot Esquire, District Judge, on the 28th day of

(continued on the 4th page)

உ
கணபதி துணை

வாழ்கவந்தணர்வானவரானினம்...... ...... ...
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக............
ஆழ்கதீயதெல்லாமரனாமமே...... ...... ... ...
சூழ்கவையகமுந்துயர்தீர்கவே........ ..........

# விளம்பரம்.

இவ் வியந்திரசாலையிலுள்ள சில புத்தகங்களின்விலை இப்பொழுது குறைக்கப்பட்டிருக்கின்றது. இனிமேல் இரண்டாம் பாலபாடம் ௧0 சதமாகவும் மூன்றாம் பாலபாடம் ௨0 சதமாகவும் நிகண்டு ௧-வது முதல் ௧0 வது முடிய ௭௫ சதமாகவும், ௧௧ வது முதல் ௧௨ வது முடிய ௨௫ சதமாகவும் விற்கப்படும்.

இங்ஙனம்
இந்துசாதனமனேசர்.

இந்துசாதன கையொப்பவரவு.

| | | ரூ ச. |
|---|---|---|
| ஸ்ரீ செ. கல்லதம்பி வைத்தியர் | திரிகோணமலை | ௨-00 |
| இ. [illegible] | கொழும்பு | ௨-00 |
| சு. சபா[illegible] ஐயர் | கொழும்பு | ௨-00 |
| S. ஆ[illegible]பிள்ளை | மாத்தளை | ௨-00 |
| V. சம்பி பிள்ளை | கொற்மலி | ௫-00 |
| S. [illegible] | டிக்கோயா | ௨-00 |
| C. [illegible] | உவெல்லவேயா | ௨-00 |
| T.V. [illegible]பிள்ளை | மல்லாகம் | ௩-00 |
| [illegible] | கலட்டி | ௧-௫0 |
| M. [illegible] | யாழ்: பொலிஸ்கோடு | ௧-௫0 |
| [illegible] சேகரம் | கொழும்பு | ௫ ௫0 |

# மகாபாரதம்

## சபா பருவம்.

இது விளம்பி வைகாசிமீ முதல் சங்கிகையாக விற்றுவருகின்றோம். சங்கிகை ௧ ரூபா தபாற் செலவுடன் ௨௮ சதம்

ஆதிபருவம் உரையாசிரியர் படத்தோடு ரூ ௩ ௯.

வை. சுப்பிரமணியபிள்ளை
விவேகாநந்த யந்திரசாலை மானேசர்

உறுதியழித்தல் விளம்பரம்.

நான் நுணாவில்குடி சின்னப்பொடியர் கதிரேசருக்கு, கைதடி காவற்குளி நொத்தாரிசு சி. வேலாயுதர் முகாவில் ௧அகூ௰ ம ஆண்டு ஆனிமீ ௩௨ சுகூ௩ம் இலக்கத்தில் நன்கொடை உவசமாயெழுதிக்கொடுத்த உறுதியை, அவர் காலஞ்சென்றவிட்டபடியால் அழித்து அதன் ஆட்சியை ஒப்புக்கொண்டிருக்கிறேனென்பதை வெளிப்படுத்துகின்றேன்.

நியாகர் கைம்பெண் X தங்கமுத்து (கீறல்)

# இந்துசாதனம்.

## இந்துமத தற்காலநிலே.

:O:

கீழைத்தேசங்களெங்கணும் இப்பொழுது ஓர் பெரும மார்க்க அருட்சியுண்டாயிருக்கின்றது. இந்தியா, சீயம், அனம், ஜப்பான் முதலியவிடங்களிலெல்லாம் கீழைத்தேச பண்டைமதங்களை ஆராய்ந்தறியவேண்டுமென்னுமாசையும் அவைகளை முந்திய நந்நிலைக்குக் கொண்டுவரவேண்டுமென்னு மபிப்பிராயமும் இப்பொழுது பலரகத்துங் குடிகொண்டிருக்கின்றன. ருசியா, ஜாமனி, பிரான்சுமுதலியகிறீஸ்தராச்சியங்கள் மூலமாயெழுந்த உள்ளூர்க்கலகத்தாலும், கலிபிலிகளாலும் கலக்குற்றுநின்ற சீனதேசத்தாலும் சிக்காக்கோ நகரிற் கூடிய மார்க்கமகாசபைக்கு ஓர் பிரதிநிதியை அனுப்பிற்றென்றால் கீழைத்தேசங்களில் கிளர்ந்திருக்கும் மார்க்காபிமானம் இத்துணைத்தென்பது சொல்லவும்வேண்டுமோ. ஆனால் எமது முன்னோர் மார்க்காபிமானமில்லாதவர் என்பது எமதுகருத்தன்று. லௌகிக மாயாவாழ்க்கையிலமிழ்ந்திக் கிடக்கும் நம்மனோரிலும் நம்முன்னோர் மார்க்கத்தி லதிகமாக உழைத்தவந்தாரென்பது மறுக்கொணுவுண்மை. எமது முன்னோரது ஜீவியம் முழுதும் மார்க்க ஜீவியமாகவே இருந்தது. மார்க்கவிஷயமாக எவ்வளவோ அரிய பெரிய கிரந்தங்களையெல்லாம் எழுதின எம்முன்னோர், காலவரையறையுள்ள இதிகாச நூல்களை (History) எழுதாதுவிட்டதற்கு நியாயம், அவர்கள் இம்மையைப்பார்க்கிலும் மறுமையையே பெரிதாகக் கொண்டிருந்ததேயென பம்பாயிலுள்ள மெஸ் கார்க்காரியரென்பவர் சொல்லுகின்றனர், இன்னும் "இந்தியரே உலகத்திலுள்ள எச்சாதியாரிலும் சமயபத்தி விசிட்டமுடையரெனவும், அவர்கள் மார்க்கத்திற் பிறந்து, மார்க்கத்திலுணடுடுத்து, மார்க்கதி லிறக்கின்றனரெனவும், அதாவது அவர்கள் செய்யு மொவ்வொரு கிரியையும் மார்க்கசம்பந்தமுடையதாகவே யிருக்கின்றதென" றெவெறெண்ட் சிலேற்றர் என்பவர் சொல்லுகின்றனர். ஆயின் எமது நாடு வேற்றரசர் கைப்பட்டபின்னரோ இந்துமதத்தை வெளியரங்கமாயனுட்டிக்கச் சனங்கள் பின்நின்றனர். எமது தேசத்தைக் கைப்பற்றியாண்ட போட்டுக்கேயரும், உலாந்தரும் இந்துமதத்தை வெளியரங்கமாயனுட்டித்தவர்களைத் தண்டித்ததுமன்றி, அநேக இந்துமத நூல்களை சுட்டெரித்தும் விட்டனர். மற்றைய மார்க்கங்களை நிந்திப்பதில் தலையாயுள்ள மகமதிய சமயமும், பலபிரிவினைப்பட்டுள்ளதாய கிறீஸ்துமதமும் தம்முள் ஒன்றையொன்று நிந்தித்ததுமன்றி மற்றைய மார்க்கங்களையும் நிந்தித்துவந்தன. இந்துமதத்தைக் கற்காதபடியும் அதனை அனுசரியாதபடியும் தடுத்தற்கு இவர்கள்செய்துவந்த உபாயங்கள் பல. ஆயின் உறுதியான விசுவாசமும், மனமுமுள்ள இந்துசமயிகள் இரகசியத்தில் தமதுமதத்தை யனுசரித்து அதன்வழி யொழுகிவந்தனர்.

இந்துசமயமானது ஒரு அவதாரபுருடனது, அல்லது ஒரு தீர்க்கதரிசியினது விசேஷஜீவியத்திற் தங்கியிராது, எக்காலத்திற்கும் எத்தேசத்திற்கும் எந்த ஸ்திதியிலுள்ளோர்க்கும் ஏற்கக்கூடியதாய்த் தர்க்கரீதியான உண்மைகளிற் தங்கியிருக்கின்றது. ஆகையாலன்றோ அது எமது நாட்டை வெற்றிகொண்டு ஆண்ட மகமதியரதும் போட்டுக்கேயரதும் உலாந்தரதும் துராகிதத்திற்கெல்லாம் தப்பி, பிரசைகட்கு மார்க்க இஷ்டத்தையளித்து, ஆளும் பிரித்தானிய அரசின்கீழ் முன்போல ஒளிகான்று பிரகாசிக்கும் சலாக்கியத்தைப் பெற்றிருக்கின்றது. ஆசியாவிலிருந்த எமதுமுன்னோர் மார்க்கநிந்தாட்சணையடைந்துவந்த காலத்தில் ஐரோப்பியர் மார்க்க கலகமின்றிச் சுகமாய் வாழ்ந்தனரல்லர். அங்கும் கத்தோலிக்கர் புரொடெஸ்தாந்து கிறீஸ்தவர்களையும், புரொடெஸ்தாந்துக் கிறீஸ்தவர்கள் கத்தோலிக்கரையும் மார்க்கநிந்தாட்சணை செய்து கொலைபுரிந்தனர். இப்பொழுது தேசங்களைப் பிடிப்பதற்கு யுத்தங்கள் நடைபெறும்வண்ணம் முன் மார்க்கத்தைப் பரப்புதற்கு யுத்தங்கள் நடந்தன. அப்போஸ்தலர்காலத்திலிருந்த மார்க்கத்திற்கும் லூதர் ஏற்படுத்திய புதிய மார்க்கத்திற்குமிடையே எழுந்த வாக்குவாதத்தினால் ஏறக்குறைய இருநூறுவருஷங்களாக யுத்தங்கள் நடந்தன. இந்த யுத்தங்களாலடைந்த துக்க அனுபவங்களால் ஐரோப்பியசாதியார் யாரும் மார்க்கஇஷ்டமளித்தாளுதலே உத்தமமென அறிந்து தமக்குட் சமாதானப்பட்டனர். இங்ஙனம் மார்க்கஇஷ்டமளித்து ஆண்டதா[illegible]டாய நன்மையை அனுபவத்திலறிந்து அவ்விதமே கீழைத்தேசங்களையுமாளத் தலைப்பட்டனர். அன்றியும் கீழைத்தேசங்களோடு வியாபாரிகள் நடத்துவதற்கு மார்க்க இஷ்டமே உத்தமமெனவுங் கண்டனர். இன்னும் போட்டுக்கேயரும் உலாந்தரும் கீழ்த்தேசங்களில் நல்லரசுநடாத்தி அனுகூலமடையாது விட்டதற்குக் காரணம் அவர்கள் செய்த மார்க்கநிந்தாட்சணையென்பதையுமிவர்கள் அறிந்துகொண்டார்கள். கிறீஸ்தசமயத்தால் வந்த நற்பெறுபேறெனக் கிறீஸ்தவர்கள் வாய்ப்பறையறைந்து திரியும் இம்மார்க்க இஷ்டம் வந்த வரலாறிதுவே.

இது நிற்க, பிறித்தானிய அரசின் கீழுள்ள பிரசைகட்கெல்லாம் முழு மார்க்க இஷ்டமும் கொடுக்கப்பட்டிருக்கின்றது, இதற்கு விரோதமாய் நடக்கும் உத்தியோகஸ்தர் சிலர் ஆங்காங்குளரென்பது உண்மையாயினும் பிரசைகட்கு மார்க்க இஷ்டம் கொடுக்கப்படவேண்டுமென்பது இங்கிலீஷ அரசியற் பிரமாணங்களுள் விசேஷித்தவொன்றாயிருக்கின்றது. ஏறக்குறைய ஒன்பது நூற்றாண்டுகளாக இந்துமதத்தை நசித்துவிடப் பல அரசினர் பலவிதபிரயத்தனங்கள் செய்தும் அது அழிந்துபோகாது நிலைநின்று இந்தியாவில்மாத்திரமன்று மேலைத்தேசங்களிலும் இப்பொழுது தன் ஒளியைக் காலுகின்றது. அதன் பெருமையையறிந்த மேலைத்தேச பண்டிதசிரோமணிகள் பலர் அதனை ஆராயவும் விசுவசிக்கவும் தலைப்பட்டிருக்கின்றனர். நியாயமுகத்தும் சாஸ்திரமுகத்தும் நிற்குமாற்றலுள மதமெதுவோ அதனை அறிவுடையோர் அங்கீகரிப்பதும் மெய்ச்சுவது மாச்சரியமன்று. முற்பிறப்பிற் செய்துகொண்ட கன்மத்திற்கேற்ப நாமிப்பிறவியிற் சுகதுக்கங்களை யனுபவிக்கின்றேமென்பது இந்துமதத்தின் ஓர் விசேஷித்த போதனை. இதனை அனுசரிக்கும் யாவரும் இந்துமதமே எக்காலத்திற்கும் எந்த ஸ்திதியிலுள்ளோர்க்கும் ஏற்ற மார்க்கமென்பதை ஒத்துக்கொள்வர். தியோசாபிக்கல் சோசயிற்றியாரே இந்துமத உண்மையையும் விசேடத்தையும் மேலைத்தேசத்தார் அறியும்படி செய்துவைத்திருக்கின்றனர்.

கிறீஸ்துமதத்தின் உண்மையை உலகறிய எடுத்துக் காட்டவேண்டுமென்னும் நோக்கத்தோடு கூட்டப்பட்ட சிக்காக்கோ மார்க்கசபையில், எமது இந்துசமய மேன்மையன்றோ உலகப்பிரசித்தியாயிற்று. ஸ்ரீமத். விவேகானந்தசுவாமியவர்கள் சிக்காக்கோ நகரத்திற் செய்த பிரசங்கத்தாற் பல்லாயிரவர் இந்துமதத்தவர்களாயினரென்று நாம் சொல்லவரவில்லை ஆனால் இந்துமதமுமோர் மதமோவென மேலைத்தேசவாசிகள் இகழ்ச்சியாகக்கொண்டிருந்த எண்ணம் இப்பொழுது நீங்கிவிட்டது. தோற்றமாத்திரையளவிற கிறீஸ்தவர்களாயிருப்பவர்களும், உண்மைக் கிறீஸதவர்களும் இப்பொழுது இந்துமதத்தின் விசேடததையும் அதன சிறப்பையும் அறிந்து ஆச்சரியப்படுகின்றனர். இற்றைக்கு ௨0 வருடங்களின்முன் மேலைத்தேசவாசிகள் எம்மை, கற்களையும், செம்புகளையும், பேய் பிசாசுகளையும், வணங்கும் விக்கிராராதனைக்காரரென இகழ்ந்தனர். ஆயின் இப்பொழுதோ அந்த இகழ்ச்சியான எண்ணமெல்லாம் நீக்கிவிட்டது.

முதலாவதாய் சமஸ்கிருதத்தைக் கற்றுவந்த ஜர்மனிய பண்டிதர்களும், இரண்டாவதாய், கீழைத்தேசபாஷைகளைக் கற்றுவரும் பலசாதிப் பண்டிதர்களும், மூன்றாவதாய் தியோசாபிக்கல் சங்கத்தாரும், நாலாவதாய், சிக்காக்கோ மார்க்க சபையும், ஐந்தாவதாய் மேலைத்தேசங்களில் இந்துமதத்தைத் தற்போது போதித்துவரும் இந்துமதபோதகர்களுமே இந்த இந்துமத அருட்சிக்குக் காரணராயிருக்கின்றனர்.

## ச மா சா ர ம்

எங்கள் ஏசன்றர்—எங்கள் ஏசன்றர் மெஸ் ஐவேஷ் துரையவர்கள் சுற்றோட்டத்திற்சென்றிருக்கின்றனர். கரைச்சி, துணுக்காய், பூநகரி, இரணைதீவு முதலிய விடங்களைத் தரிசித்து மற்றமீ ௧0௨ யளவிற்றான் இங்கு வருவராம்.

மெஸ் பாட்லற்—(Mr. Bartlet) யாழ்ப்பாணம் பொலிஸ்நீதவான் மெஸ் பாட்லற் துரையவர்கள் தங்காலை டிஸ்திறிக்கோட்டு நீதவானாக நியமனம்பெற்றிருக்கின்றனர். அவரது இடத்திற்கு மெஸ் தம்பு அவர்கள் நியமனம்பெறுவரென நினைக்கின்றோம்.

வண்ணார்பண்ணைக்கோர் தபால்ஆபீசு—வண்ணார்பண்ணையில் ஓர் தபால்ஆபீசு ஏற்படுத்தப்படவேண்டுமென்பது தீர்மானமாய்விட்டது. இது வண்ணைநகர் வாசிகளாகிய எமக்கெல்லாம் பெரும்வசதியையும் அரசினர்க்கு நல்லவரும்படியையும் கொடுக்குமென்பதிலையமின்று.

உத்தியோக நியமனம்—ஷர்காவற்றுறையில் சப்கொலெக்றராகவிருந்து இப்பொழுது இளைப்பாறியிருக்கும் ஸ்ரீ சுப்பிரமணியமவர்கள கனிட்டபுத்திரன் ஸ்ரீ சிற்றம்பலமவர்கள் வல்லுவெட்டித்துறை சேருச்சிறுப்பராக நியமனம்பெற்று இக்குவந்து ஷர்காவற்றுறை லாண்டிங் உவேயிற்றாராக சிறிதகாலத்திற்கு வேலைபார்க்கும்படியங்கு சென்றிருக்கின்றனர்.

கிணற்றள்வீழ்ந் திறத்தல்—வண்ணார்பண்ணையில், இளம்பராயமுள்ள தட்டாரக்கன்னிகையொருத்தி தான்குடியிருந்த வளவிற்கு அருகாமையிலிருந்த ஓர் கிணற்றள் வீழ்ந்திறந்துவிட்டனள். இவள் குடியிருந்த வளவில் ஓர் கிணறிருந்தும் அதில் விழாது அயல்வீட்டுக் கிணற்றுக்குள் வீழ்ந்திறந்த நியாயமயாதோ தெரியவில்லை.

மரணம்—புத்தூரிலுள்ள பிரபல தனவந்தருள் ஒருவராகிய ஸ்ரீ. சிற்றம்பலமுதலியார் மழவராயரவர்களின் அருமைப் புத்திரியும், ஸ்ரீ. சுப்பிரமணியர் முத்தைகுமாரு அவர்களின் தேசபத்தினியுமாகிய தெய்வானைப்பிள்ளை சென்றமீ ௨௬௨ தேகவியோகமாகிவிட்டனர். இவருக்கு இறக்கும்போது வயது ௨௧. இப்பெண்மணியை இழந்து துன்புறும் தந்தையரோடும், கணவனோடும் மற்றைய சுற்றமித்திரரோடும் நாமுமனுதாபப்படுகின்றேம்

மரணம்—வடமாகாண அரசாட்சி வைத்தியர் டக்தர் தோண்கிலவர்கள் கொழும்பிலிறந்துவிட்டனர். சுரவிலுண்டாய இரணமே இவரது மரணத்திற்குக் காரணம். இவ்விரணம் வெட்டிவெடுக்கப்பட்டும், டக்தரவர்கள் சுகமுறாது இறந்துவிட்டனர் ஐயையோ!! விதியைவெல்லயாரால் முடியும.

நகரமண்டபம்—சென்றமீ ௨௫ம் தேதி யாழ்ப்பாணம் பொலிஸ்கோட்டு வீட்டிலே நகரமண்டபமொன்று யாழ்ப்பாணத்திலே கட்டவேண்டுமென்பதைக்குறித்து ஆலோசிப்பதற்காக ஓர் கூட்டம் கூடிற்று. அதற்கு எங்கள் ஏசன்றர் மெஸ் ஐவேஷ் துரையவர்களக்கிராசனபதியாயிருந்தார். ஏறக்குறைய முப்பதுபேர்வரையிற் சமுகராயிருந்தனர். அடிக்கடி கூட்டங்கள் கூடுவதற்கு நகரமண்டபமொன்று அத்தியாவசியகமெனப் பேசப்பட்ட லுவகிக்கப்பட்டபோது கத்தோலிக்கருருவொருவரெழுந்து, நகரமண்டபத்திலும், சேரிக்கு நல்லதண்ணீர் வருவித்துக்கொள்வதே உத்தமமெனப் பேசியும் கூட்டத்தாருட் பெரும்பாலினர் நகரமண்டபமே வேண்டுமென நின்றலையாலங்ஙனம் செய்யவேண்டுமென்பதே தீர்மானிக்கப்பட்டது.

இந்தாலீஜ்—இக்கமீ ௬கூ சாயங்காலம் காட்டுக்கோட்டைச் செட்டிப்பிள்ளைகளிடம்சிலபிரபுக்கள் சென்று யாழ்ப்பாணத்திலிருந்து மலையாளத்துக்கு ஏற்றுமதியாகும் புகையிலைக்கு ஓர்மகமை ஏற்படுத்தி அதனால் வரும் வரும்படியை இந்தாலீசுக்கு உபகரிக்கவேண்டுமெனக்கேட்க, அவர்கள் அதற்கிணங்கி கண்டியொன்றிற்கு ௬ சதவீதமாக ஓர்மகமை யேற்படுத்தியிருக்கின்றனர். இதனால் வருஷமொன்றிற்கு ரூபா ௫00 வரக்கூடியதாயிருக்கின்றது. செட்டிப்பிள்ளைகளால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் இத்தருமம் மிகவும் வியக்கற்பாலதே

இன்னும் மிட்டாய்க்கடை ஸ்ரீ.வல்லிபுரமவர்கள் இந்தாலீஜ் கட்டடத்தின் ஓர்பாகத்தைக் கட்டிமுடிக்க வாக்களித்திருக்கின்றனர். இந்தாலீஜை நன்னிலைப்படுத்த பலபிரபுக்கள் இப்பொழுதுமுன்வந்திருப்பதைக்காண்பது நமக்கெல்லாம்பேரானந்தத்தை விளைக்கின்றது.

அடிபிடி—நீர்வேலியில் ஒருவனைச் சிலரடித்துப்பகோரப்படுத்திக் குற்றுயிரோடு ஒருவாழைத்தோட்டத்து ளெறிந்துவிட்டனராம். மறுநாட் தோட்டக்காரன் தோட்டத்திற்குப் போனபோது இவன்கிடப்பதைக்கண்டு அவனையோர் வண்டியிலேற்றி ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிட்டனன் இவனுக்கும் நீர்வேலியிலுள்ள வேறுசிலர்க்கும் ஒரு சண்டையொன்றுண்டாம்.

சிரேஷ்டநீதிபதி—எங்கள் சிரேஷ்டநீதிபதி சேர் போன்சரவர்கள் மூன்றுமாசலீவுபெற்றுச் சீமைக்குப் போகின்றனர். விவாகம் செய்துகொள்ளும் நோக்கமாகவே செல்கின்றனரெனச்சத்தம்.

மகிருஸ்வங்குச் சிறாப்பு—மகிருஸ்வங்குச் சிறாப்பு ஸ்ரீ. இராமலிங்கமவர்கள் வங்குப்பணம் ரூபா நாலுலட்சத்து இருபதினாயிரத்தை யபகரித்துக்கொண்டனரெனக் குற்றஞ்சாட்டப்பட்டுக் கொழும்புப் பொலிஸ் கோட்டில் விளக்கப்பட்டு வருகின்றனர்.

உத்தியோகமாற்றம்—மேன்மாகாண ஏசன்றர் மெஸ் எலிஸ் துரையவர்கள் சீமைசெல்ல விரும்புதால் அவருடைய இடத்திற்கு அவர் வரும்வரைக்கும் வேலைபார்க்கும்படி இப்பொழுது சீமையிலிருக்கும் மெஸ் பிஷர் துரையவர்கள் நியமனம்பெறுவராம். மெஸ் பிஷர் துரையவர்கள் வைகாசி மாசமளவில் இங்குவருவர்.

ஓர் புதறோட்டு—தனுக்காய்ப்பகுதிக்கு ஓர் புதறோட்டுத் திறக்கவேண்டுமென யாழ்ப்பாணம் டிஸ்திறிக் றோட்டுக்கொமிற்றியார் தீர்மானித்திருக்கின்றனரெனக் கேள்வி.

மெஸ் லெமகுரியர்—மெஸ் லெமகுரியரவர்கள் கண்டி டிஸ்திறிக்கோட்டில் பூவாமாகாணத்திலுள்ள கும்மனக்கெல்லிவென்னுமோர் துண்டுநிலம் தமக்குரியதெனச்சொல்லி அதன்பெறுமதி ரூபா எண்பதினாயிரத்திற்கும், அதனாற் தனக்குண்டாய நட்டம் இருபதினாயிரத்திற்கும் ஓர் தாட்சிவைத்திருக்கின்றனர். இந்நிலம் இப்பொழுது றெயில்வே பாவிப்பிற்காக உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றது.

பூனக்கொலை—தாமோதரர் சபேக்காரையும் அவனது சகோதரனையுங் காட்டிக்கொடுத்து அரசாட்சியாரிடம் தன்கொடைப்பணம்பெற்ற டிருவிஸ்ஸ என்னுமிரு சகோதரரைக் கொலைசெய்த வாசுதேவசபேக்கார், குணடி, சதி, யென்னும் மூவரும் விளங்கப்பட்டு, குணடி யென்பவன் மரணதண்டனையும் சாதி யென்பவன் பத்துவருடகாவலும் விதிக்கப்பட்டனர்.

ஆண்வேடம்பூண்ட ஸ்திரீ—சிட்னி நகரத்தில் ஓர் பெண் ஆண்வேடம்பூண்டு பத்துவருஷங்களாக ஓர் துரைமகனிடம் வேலைகொள்ளப்பட்டிருந்தனள். இவள் வேலையாயிருந்த இப்பத்துவருடகாலத்தில் எயராவது இவளைப் பெண்ணெனச் சமுசயப்பட்டிலராம். எவரும் ஆணென்றே மதித்துவந்தார்களாம் இறந்தபின்னரே இவளொருவேஷதாரியென்பது வெளியாயிற்றும்.

—பேளின் நகரத்திலிருப்பவர் ஒருவர் ஒருவிதநூல் கண்டுபிடித்திருக்கின்றனர். இந்நூலை மண்ணெண்ணெய்க்குட் கலந்துவிட்டால் அது நெருப்புப்பற்றி வெடியாதாம் விளக்குக்கண்ணாடிகளும் முடைந்து மோசம் போகாவாம். கொழும்பிலிருக்கும் என் எஸ் பேர்னன்டோ என்பவர் இந்தநூலை வைத்துவிற்கின்றனர்.

## கடிதம்

### தமிழ்ச்சங்கம்.

தமிழ்ச்சங்கத்தார் நடத்திய பரீக்ஷையிற் சித்திபெற்ற பிள்ளைகளுக்குச் சென்ற சனிக்கிழமையிரவு பட்டமும் பரிசும் வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலையில் அளிக்கப்பட்டன. இவ்வாறாகிய சங்கமிருந்து பரீக்ஷித்துப் பட்டங் கொடுக்கிறது இங்கிலிசு ஒன்றுக்கேயல்லாமல் வேறு சுதேசபாஷையொன்றுக்கு மிதுவரையுமில்லாமையால், இதனைப் பார்க்க வெகுசனங்கள் நெடுந்தூரங்களிலுமிருந்து வந்திருந்தார்கள். அதற்கேற்றபடி வித்தியாசாலையும் மேற்கட்டி பூமாலை தீபம் முதலானவைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. நாவலரவர்கள் காலத்துக்குப் பின்னே இவ்வளவு வித்துவகோஷ்டி அங்கே வந்து கூடவில்லை. இச்சபைக்கு பொலிசுநீதிபதியாயிருந்த ஸ்ரீ. கு. கதிர்வேற்பிள்ளையவர்கள் அக்கிராசனாதிபதியாக வரிக்கப்பட்டார்கள். அக்கிராசனாதிபதியுடைய ஏவுதலினால், சங்கத்தின் வரலாறும் சங்கத்தார் நடத்திய முதன்முறைப் பரீக்ஷையின் வரலாறும் அடங்கிய பத்திரம் சங்கத்து அக்கிராசனாதிபதியால் வாசிக்கப்பட்டது. அதன்பின் அவ்வக்கிராசனாதிபதியவர்களே சித்திபெற்ற பிள்ளைகளுக்கு தங்கத்தாலும் வெள்ளியாலும் செய்யப்பட்டு சரசுவதியுடைய திருவுருவமும் தமிழ்ச்சங்கம் பாலபண்டிதன் என்னும் பெயர்களும் வரையப்பட்ட முத்திரைகளை அவர்கள் கையிலிட்டுப் பட்டயங்களைக் கையிற் கொடுத்தார்கள். அவற்றை மரியாதையோடு ஏற்ற பிள்ளைகள் உடனேயுடனே சிறப் பிரசங்கஞ் செய்தார்கள். இதன்பின்னர் ஸ்ரீ செல்வத்துரைப்பிள்ளை B A, வ. குமாரசுவாமிப் புலவர், அ. குமாரசுவாமிப்புலவர், சு. சரவணமுத்துப்பிள்ளை, கிளாலிக் குகதிர்காமர், பிறக்கிராசி கதிரவேலு, கொட்டடியூர் பொன்னம்பலம், ஸ்ரோர் கீப்பர் சின்னையாபிள்ளை, என்பவர்கள் தமிழினுடைய மகிமையைப் பிரசங்கித்துப் பிள்ளைகளுக்கு நல்லறிவு போதித்தார்கள். அக்கிராசனாதிபதி கதிர்வேற்பிள்ளையவர்கள் மேலே பேசப்பட்டவைகளையெல்லாந் திரட்டிப் பொழிப்பான ஒரு சிறுப் பிரசங்கஞ் செய்து சபையை முடித்தார்கள்.

சபை அக்கிராசனாதிபதி வாசித்த சங்கவரலாற்றுப் பத்திரம் வருமாறு:—

தமிழ்ப்பாஷையானது சம்ஸ்கிருதபாஷைபோலக் கடவுளால் அருளப்பட்ட பாஷையென்பார்கள் இதனது கடவுட்டன்மையை அந்நியர் சிலர் ஆக்ஷேபிப்பாராயினும், இது இருடிகளால் எங்களுக்குக் கிடைத்ததென்பதை ஆக்ஷேபிப்பார் ஒருவருமில்லை அகத்தியமுனிவர் முதலானவர்கள் செய்த இலக்கண நூல்களே இன்றும் வழங்குவனவாயின. இப்பாஷை உண்டான காலம் நமக்கு நிச்சயமாகத் தெரியாதாயினும் ம-ா-ா-ஸ்ரீ சி. வை. தாமோதரம்பிள்ளையவர்கள் முதலானோர் மிகப்பல வாயிர வருடங்களாக இது வழங்கி வருகின்றதென்று பண்டிதர் பலர் ஒப்புக்கொள்ளுமாறு தாபித்திருக்கிறார்கள். ஐயாயிர வருடங்களுக்கு முன்னே இப்பாஷையும் இதற்குரிய இலக்கணநூல்களும் இருந்தனவென்பதும் ஆக்ஷேபமின்றித் தாபிக்கப்படும்.

இப்பாஷை வழங்குந்தேசம் திருப்பதியென இக்காலத்து வழங்கும் வேங்கடகிரிக்குத் தெற்கேயுள்ள தேசங்களும் இலங்கையின் வடபாகங்களுமாகும். ஒருகாலத்தில் சுமத்திறா (Sumatra) முதலிய தீபாந்தரங்களிலும் இப்பாஷை வழங்கியதென்பது சிலர் கருத்து இக்காலத்தில் இதனைப் பேசுவோருடைய தொகை ஏறக்குறைய இரண்டுகோடியாகும்.

இப்பாஷையின் மகிமையை அறியாத நம்மவர்களும் மற்றை ஐரோப்பியரும் Rev: G W. Pope என்பவர் Asiatic Quarterly Review முதலிய பத்திரிகைகளுக்கு எழுதுவன முதலானவைகளை வாசித்துப்பார்க்கின், அதன் மகிமையைச் சிறிதறிய வல்லுநராவர்.

இப்பாஷையை ஆதியில் வளர்த்துவைத்தவர்கள் பாண்டியராசர்கள். பாண்டியர்கள் காலத்தில் மூன்று சங்கங்கள் இருந்தனவென்றும், முதற்சங்கத்திலே ௫௪௯ புலவர்களும், இடைச்சங்கத்திலே ௫௯ புலவர்களும், கடைச்சங்கத்திலே ௪௯ புலவர்களும் இருந்தார்களென்றும், முதற்சங்கம் ௪௪௪0 வருடமும், இடைச்சங்கம் ௩௭00 வருடமும், கடைச்சங்கம் ௧௮௫0 வருடமும் நிலைபெற்றிருந்தனவென்றும், முதற்சங்கத்திலே ௪௪௪௯ புலவரும், இடைச்சங்கத்திலே ௩௭00 புலவரும், கடைச்சங்கத்திலே ௪௪௯ புலவரும் நூலரங்கேற்றினார்களென்றும், சொல்லப்பட்டிருக்கின்றன. புகழேந்தி ஒட்டக்கூத்தர் கம்பர் கச்சியப்பர் வில்லிபுத்தூரர் அதிவீரராமபாண்டியர் முதலானவர்களெல்லாரும் இச்சங்கங்களுக்குப் பிற்காலத்திலிருந்தவராவர். இதற்குப் பிற்காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்தரசியற்றிய பரராசசேகரன் முதலிய சில அரசர்களும் பாண்டியராசர்களைப்போலவே தமிழை நன்குமதித்தும் அதனையறிந்த புலவர்களை மிக்க மதிப்போடு போஷித்தும்வந்தார்கள். அவர்கள் காலத்தில் தமிழில் அரிய நூல்களாகிய இரகுவம்மிசம் முதலியன அரசகேசரி முதலிய வித்துவான்களால் இயற்றப்பட்டன. அதனாற்றான் இத்தேசத்தில் இன்னுஞ் சிறிது செந்தமிழ்மணம் வீசுகின்[illegible]

இத்தமிழ்ப்பாஷையில் உருத்திர முதலிய நவரசங்களும் பொதிந்த நூல்கள் பலவிருக்கின்றன. இராசநீதிகளைக் கூறும் நூல்கள் பலவிருக்கின்றன. பலதேசங்களுடையவும் பலவரசர்களுடையவும் சரித்திரங்களைக் கூறும் இதிகாசங்கள் பலவிருக்கின்றன வைபாகஞ் செய்பாகந் தவறுமற் செய்யப்பட்டவழி நோய்களை உடனே தப்பாமற் கண்டிக்கும் மருந்துகளையும் சந்தானகரணி சல்லியகரணி சமனியகரணி முதலிய அரிய ஓடதிகளையும் கூறும் வைத்தியசாத்திரங்கள் பலவிருக்கின்றன. நெடுங்காலத்துக்குப் பின்னே வரப்போகின்ற பலன்களை முற்பட அறிவிப்பனவாய் தற்கால ஐரோப்பியர் பலரால் மெள்ள மெள்ள அங்கீகரிக்கப்படுவனவாயுள்ள சோதிடநூல்கள் பலவிருக்கின்றன. சன்மார்க்க விதிகளைக் கூறும் நூல்கள் பலவிருக்கின்றன. மாடகூட கோபுராதிகளைக் கட்டும் விதிகளைக் கூறும் சிற்பநூல்கள் பலவிருக்கின்றன. கணக்குநூல்கள் பலவிருக்கின்றன. பதார்த்தங்களை அளக்கிற தருக்கநூல்கள் பலவிருக்கின்றன. பூபரீக்ஷை இரத்தினபரீக்ஷை அசுவபரீக்ஷை முதலான நூல்கள் பலவிருக்கின்றன. இன்னும் பலபல வகையான நூல்களெல்லாந் தமிழிலுண்டு. இவையெல்லாம் இயற்றமிழின் பாகுபாடு. இனி இசைத்தமிழ் நாடகத்தமிழ்களும் இங்ஙனமேயாகும். இவைகளுட் பல கற்பவரின்மையின் வழக்கற்றுப் போகின்றன.

இனி, மற்றைப் பாஷைகளுக்கெல்லாம் ஒவ்வொரு நடையிருத்தல்போல தமிழுக்கும் ஒருநடையுண்டு. அந்தநடைகெட்டால், தமிழ் சிறப்பின்றாய்ப் போதன் மாத்திரமன்றித் தவறுமெய்தும். தமிழ்ப்பிள்ளைகள் இங்கிலிசை அதற்குரிய நடையிற் சிறிதேனுந் தவறி எழுதினால் இங்கிலிசுகாரர் அதனை இங்கிலிசன்று என்று தள்ளுகிறார்கள். இவ்வாறாகிய தவறுகள் மேலும் மேலும் வாராதவண்ணம் பரீக்ஷாகாலங்களில் அவைகளைத் திருத்தும்படி பிள்ளைகளிடங் கொடுக்கிறார்கள். பாதிரிமார் தமக்கு அந்நியபாஷையாகிய தமிழைப்பரிபாலிக்கத் தொடங்கியபோதே அது தன்னழகு கெடத் தொடங்கிவிட்டது. பாதிரிமார் அதனை இங்கிலிசுமாதிரியாக்கிக் கொண்டார்கள், இத்தக்காலத்தில் நூல்களை அரங்கேற்றுகிறதென்ற வழக்கம் இல்லாமலே போய்விட்டது. எவனும் எதையும் எழுதிவிடலாமென்றாயிற்று. முற்காலத்திலோ அரங்கேறப்படாத நூலொன்றும் பிரமாணமாகாது. நமது "இங்கிலிசுக்கவர்ண்மெண்"டாரோவெனின் தமது இங்கிலிசுக்கு மாத்திரம் பங்கம் வராதபடி பாதுகாக்கிறார்களேயன்றித் தமிழை லக்ஷியஞ் செய்கிறார்களில்லை "The boat was tied by a rope" "we kuew him in a glance" என்றற்றொடக்கத்தனவெல்லாம் சரியான இங்கிலிசு அல்லவென்று இவைகளையும் இவைபோல்வனவற்றையும் வருஷங்கடோறும் நடக்கும் பலவகையான பரீக்ஷைகளில் திருத்தும்படி பிள்ளைகளைக் கேட்கிறார்கள். "சுடர்கள் உண்டாகக்கடவது என்றார்" "எங்கள் ஊரார் நினைக்கிறபடி ஆத்துமா திரும்பத் திரும்பப் பிறக்கிறதேயில்லை" "நான் உமக்குத் தோத்திரஞ் செலுத்துகிறேன்" "முழுச்சிவியத்திலும் ஓபாக்கிலேசத்தில் உட்படுகிறான்" அருபிகள்=ஆவிகள் " 'என் கர்ப்பத்தின் குமாரனே என் பொருத்தனைகளின் புத்திரனே " "நன்றி செலுத்தவேண்டும்" இப்படி அளவில்லாத இலக்கணப்பிழைகளும் தவறான சொற்பிரயோகங்களும் தவறான அர்த்தங்களும் கவர்ன்மெண்டார் பரீக்ஷித்துப் பணங்கொடுக்கும் பாதிரிமார் பள்ளிக்கூடத்திற் படிப்பிக்கப்படும் புத்தகங்களிலிருக்கின்றன "சுடர்கள் உண்டாகக்கடவது" என்பது இங்கிலிசில் He go and they goes என்பதற்குச் சரி தமிழறிவும் பாதிரிமாரே அநேகபிள்ளைகளைப் பரீக்ஷைக்கு விட்டுப் பெருந்தொகைப்பணம் வாங்குகிறார்கள், இவ்வகையான தவறுகளெல்லாம் நிறைந்துள்ள புத்தகங்களைப் படிக்கும் பிள்ளைகளுக்கு எந்தத் தமிழ் வரும்.

புலவர்கள் செய்துகொண்டுவரும் நூல்களைப் பரீக்ஷை செய்து தமிழை வளர்க்கச் சங்கங்கள் தமிழர்களாகிய எங்களுக்குள்ளேதான் இதற்கு ௫000 வருஷங்களுக்கு முன்னெற்றே இருந்தன. இங்கிலிசுகாரருக்குள் இவ்வகையான சர்வகலாசாலையெனப்படும் University கள் உண்டாகி ௬௦ வருஷங்களில்லை. செந்தமிழ்க்கு வரம்பெனச் செப்பப்பட்ட ஸ்ரீலஸ்ரீ நாவலரவர்கள் இவைபோலுஞ் சங்கங்கள் இக்காலத்திலுமிருப்பின் தமிழ்ப்பாஷை வளர்ந்தோங்குமென்று எண்ணி, அதனைத் தமது இருக்கோவையாருரைப்பதிப்பிறதியில் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அக்காலத்தில் அதனை முயலுவாரின்மையின் அப்போது சித்திபெற்றிலது. வித்துவசிரோமணி ஸ்ரீ பொன்னம்பலபிள்ளையவர்கள் அதனைச் சிந்திக்கவில்லை. இப்போது இத்தேசத்திலுள்ள பண்டிதராட் சிலர் அந்த முயற்சியை மேற்கொண்டு சென்றசித்திரைமாசத்திலே வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலையிற் கூடி, தமிழ்ச்சங்கமென்னும் இச்சங்கத்தைத் தாபித்திருக்கிறார்கள். இச்சங்கத்தில் இப்பொழுது பத்துப்பேரிருக்கிறார்கள். இவர்கள் தமிழிலே ஐந்து பரீக்ஷைகள் நடத்தவும் அவைகளிற் சித்திபெறும் பிள்ளைகளுக்குப் பாலபண்டிதன் முதலான பட்டங்கள் கொடுக்கவும் நிச்சயித்திருக்கிறார்கள்.

சென்ற தைமாசத்தில் முதன்முறை பரீக்ஷை நடந்தது. இம்முறை முதற்பரீக்ஷைக்குமாத்திரம் ஆறு பிள்ளைகள் விண்ணப்பங்கொடுத்தார்கள் அவருள் ஒருவர் பரீக்ஷாகாலத்தில் சுரநோயாற் பீடிக்கப்பட்டமையின், பரீக்ஷைக்கு வர இயலாதவராயிருந்துவிட்டனர். மற்றை ஐவருள் மூன்றுபேர் சித்திபெற்றனர், அவர்கள் பெயர் தாரதம்மிய முறையே அ. இளையதம்பி மா. தம்புப்பிள்ளை. க. கனகசபாபதி என்பன. இவர்கள் பரீக்ஷிக்கப்பட்ட பாடங்கள்: நன்னூற்காண்டிகையுரை, நைடதம், திரிகடுகம், கம்பராமாயணம், பெரியபுராணவசனம், பூமிசாத்திரம், இந்தியசரித்திரம், நிகண்டு, எண்சுவடி எழுத்து, பிரத்தியுத்பாதனம் (=Reproduction) பரீக்ஷகர்களாக ஸ்ரீ அ குமாரசுவாமிப்பிள்ளையவர்கள், ச. சிவப்பிரகாசபிள்ளையவர்கள், ஆ. ஆ. சிதம்பரப்பிள்ளையவர்கள், ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையவர்கள், சு. சரவணமுத்துப்பிள்ளையவர்கள், த. கைலாசபிள்ளையவர்கள், பொ. அருணாசலமவர்கள், வே. சாமிநாத ஐயரவர்கள், என்னும் எண்மரும் நியமிக்கப்பட்டார்கள். இவர்களுள் அருணாசலமவர்களும் சாமிநாத ஐயரவர்களும் முறையே உத்தியோகக் காரணமாகவும் நோய்க்காரணமாகவும் பரீக்ஷைவினு அனுப்ப இயலாதவர்களாயிருந்தமையின், அவர்களுக்காக ஸ்ரீ வ. குமாரசுவாமிப்பிள்ளையவர்களும் மா. வைத்தியலிங்கபிள்ளை யவர்களும் நியமிக்கப்பட்டார்கள்.

சித்திபெற்ற பிள்ளைகளுள் முதல்வருக்குக் கொடுக்க உத்தேசித்த பரிசு சுந்தரமடம் ஸ்ரீ கா. கந்தையாபிள்ளையாற் செய்வித்துத் தரப்பட்டது. அது சரசுவதியுடைய திருவுருவமும், தமிழ்ச்சங்கம் பாலபண்டிதன் என்னும் பெயர்களும் வரையப்பட்டுத் தங்கத்தாற் செய்யப்பட்ட முத்திரை. மற்றை இருபிள்ளைகளுக்கும் கொடுக்கப்படுவன வேறு சிலர் உபகரித்த பொருள்கொண்டு வெள்ளியாற் செய்யப்பட்டன.

இச்சங்கத்துக்குத் திருவாவடுதுறையாதீனத்துப் பண்டாரசந்நிதியவர்களைப் போஷகர்களாயிருக்கும்படி சபையார் வேண்டிக்கொண்டார்கள். சந்நிதானத்துடைய திருமுகமோ ஒன்றுங் கிடைக்கவில்லை. சந்நிதானத்துக்கு இவ்வாறாகிய விஷயங்களிற் பொழுதுபோக்கத் திருவுளமில்லைபோலும்.

இச்சங்கத்தார் தொடங்கிய முயற்சி அரசினர் தொடங்கும் முயற்சிகள்போல அதிகாரத்தோடு நிறைவேற்றத் தக்கதன்று. அரசினருடைய துணையும் மற்றைப் படித்தவர்கள் பிரபுக்களுடைய துணையும் இதற்கு வேண்டப்படுகின்றன. அரசினர், இச்சங்கத்தார் ஏற்படுத்திய பரீக்ஷைகளிற் சித்திபெற்றவர்களுக்கே தமிழோடு சம்பந்தப்பட்ட உத்தியோகங்கள் கொடுக்கவேண்டும். மற்றவர்களுந் தங்கள் தங்கள் அதிகாரத்துட்பட்ட உபாத்தியாயர் கணக்கர் முதலிய உத்தியோகங்களை அவர்களுக்கே கொடுக்கவேண்டும். இப்படி அனைவருஞ் செய்வாராயின் யாவரும் தமிழை விரும்பிக் கற்பர். தமிழிலே உண்மையான விற்பத்தியுடைய Registrar General ம-ா-ா-ஸ்ரீ அருணாசலமவர்கள் இப்பரீக்ஷைகளில் நாம் குறிக்குமொன்றிற் சித்திபெற்றவர்கள் கொத்தாரிசு வேலையை விரும்பி வரும்போது, அவர்களுக்கு அந்த கொத்தாரிசுமாருக்குரிய Preliminary Examination இல்லாதபடி செய்தருவேமென்று எழுதியிருக்கிறார்கள். இவ்வாறே ஏனையோருஞ் செய்வாராயின், தமிழ்க்கல்வி இனிது வளர்ந்தோங்கும்.

கடி.

February 1899 in the presence of Mr. V. Ganapathipillai Proctor on the part of the Petitioner and the affidavit of the Petitioner dated the 28th day of February 1899 having been read, it is declared that the Petitioner is one of the heirs of the said intestate and is entitled to have Letters of Administration to the estate of the said intestate issued to him unless the Respondents or any other person shall on or, before the 6th day of April 1899 show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

Signed this 28th day of February 1899

Signed/ C. EARDLEY WILMOT /
District Judge.

# NOTICE.

All Money Orders, Postal Orders, Cheques and other remittances must be made payable

To

*THE MANAGER*
"HINDU ORGAN"
*Jaffna*


# THE HINDU ORGAN.

JAFFNA, WEDNESDAY, MARCH 15, 1899


## HINDUS VS CHRISTIANS
## THE REV: MR. HARTLEY'S VISIT— AN OBJECT LESSON.
## THE APOTHEOSIS OF MR. HARTLEY.

The Rev: Mr. Hartley's visit to Jaffna at once enables us to recall to mind the untoward action of certain Christians and Christian organs of public opinion in Jaffna, twenty-five months ago, on the occasion of the visit of that sage of world-wide fame and name, Swami Vivekananda. The Swami was in Colombo on his way home from the Chicago Parliament of Religions, when he was invited by the educated Hindus of Jaffna to pay a visit to this part of the Island. In responding to the invitation, which he was prevailed upon to do by the good offices of our co-religionists of Colombo, the holy Swami had to cancel some of his previous engagements. He had to come to this out of the way district of Ceylon at considerable personal inconvenience, and made only a brief stay of about thirty-six hours. His address, his transcendent abilities, his erudition, his self-sacrifice, his spotless life, the intrinsic merits of the religion and philosophy he taught, the method of his teaching, and his oratorical powers and delivery, had won for him the admiration of learned audiences in America and England. Men eminent in the field of letters and religion in the West were held spell-bound by his addresses and discourses. It was admitted and acknowledged by friends and foes alike that he was the chief centre of attraction at the Parliament of Religions, the former attributing his brilliant achievements to his merits and the merits of the Vedantic religion which bids fair to become one day "the one universal religion", and the latter to his orange-coloured Sannyasic dress. It did poor credit to the intelligence of "crowds of ladies and gentlemen" of America that they were attracted to the lecture-halls of a poor Hindu Sannyasin by the style of his dress. This reason which the Churches put forward for the purpose of minimising, in the eyes of the world, the eminent success which attended the Swami's exposition of the religion and philosophy of the Hindus, went a great way to damage the reputation of the Americans for a knowledge of the affairs of the world and of its peoples. Still the detractors of the Swami did not hesitate to ascribe his unrivalled and admitted success as a lecturer on religion, to his peculiar dress. However that might be, at the time of the Swami's visit to Jaffna his name was in the lips of one and all working in the cause of religion whether Christian, Hindu, Buddhist, or Muhammadan.

Such were the salient features of the career of Swami Vivekananda in the West, when he made his triumphal entrance into Jaffna in January 1897. Such a teacher of mankind, whatever religion or persuasion he might belong to, would have been received as a welcome visitor by any body of religionists among whom the predominating sentiment is the "divine" principle of love, and not animal passion. The Swami's teachings which breathed the utmost love and toleration towards all non Hindu creeds, were specially valuable to the Christian Padres whose mission is to Christianize the whole world. If they did not wish to welcome such a preceptor, they ought to have at least refrained from sneering at or throwing mud on him. But what was their attitude? What was their action?

The Reverend editor of the "Morning Star" wrote leading articles not only depreciating and disparaging his work and utterances, but attacking him personally. It must be said to the credit of the "Catholic Guardian" that beyond quoting Macaulay's exploded notions of Hinduism as against the views expressed by the Swami in his lecture on that religion delivered at the Hindu College Hall, and beyond culling and publishing isolated passages from newspapers inimical to him, the "Catholic Guardian" did not publish any original article calculated to belittle the Swami or his work. Even this mode of hostile criticism was not indulged in more than once. Our complaints were chiefly against the "Morning Star", the Protestant Missionaries, and their creatures. The files of the "Star" will show that everything the Editor of that paper could have done short of breaking the provisions of the Ceylon Penal Code, was done to discredit the Swami's doings at Jaffna and elsewhere. Bitterest personal attacks were hurled at him, and American ecclesiastical organs were laid under contribution, not only for vilifying the Swami personally, but also for distorting his utterances. In short, without the slightest provocation, the Editor of the "Star" comported himself as a most unrelenting and unpardoning enemy who had received personal affront at the hands of the Swami, though the Doctor of *Divinity* who penned those violent diatribes had never, in his life, seen the swami. Not contented with all this, he proceeded to ransack the columns of Bengalee newspapers to find out references to his birth, family, caste, and other antecedents.

After the Swami left our shores and behind his back, an underling of the Central College authorities, though as ignorant of the Hindu religion and Hindu Shastras as ignorance can possibly be, brought out a pamphlet pretending to controvert the Swami's position as an exponent of Hinduism. If this were all, we should fain refrain from adverting to the effusions of this "product" of Christianity. But the brochure was published from the Central College, evidently under the imprimatur of the Wesleyan Missionary body, and contained a gross libel on the educated Hindus of Jaffna, who were called "the duped followers" of Vivekananda. The attempt of a pupil-teacher of the Central College to criticize Swami Vivekananda was tantamount to an attempt on the part of a Hindu College boy to criticize His Holiness the Pope or His Grace the Archbishop of Canterbury. Still, the Wesleyan Missionaries, who are imbued with no sense of proportion, sanctioned, if not counselled, the publication.

Now let our readers compare the action of the local Christians on the occasion of Swami Vivekananda's visit with that of the Hindus on the occasion of the Rev: Mr. Hartley's visit. What a contrast! The conduct of the "heathen" must put to the shame the "children of the living God." What a humiliation!!! The Swami came to a country which was altogether Hindu three hundred years ago, and is still Hindu to the backbone as far as nine-tenths of its inhabitants are concerned, and he came too, at the earnest request of the Hindus of the place. The Rev: Mr. Hartley, not half so eminent as the Swami, came to minister to a handful of Methodists including also those Christians by whom the Wesleyan Mission is officered. Still the Hindu community did not so much as utter a single word condemnatory of Mr. Hartley or his work. He was neither molested nor his work deprecated. We ask our readers to look on this picture and on that, and find among whom and in whose minds lie imbedded envy, jealousy, and intolerance. Only in one respect we have found the critics of the Swami to be superior to Hindus—it is in church going, taking the name of the Lord in vain, and indulging in tall-talk about the darkness of other religions. Practical religion—religion which rises superior to passion and prejudice, religion which renders to every man his due—is seldom to be found among a class of people who too often pose as the custodians of "God and morals." When will they learn "to do unto others as they would that others should do unto them"? Looking at the materialistic tendencies of Christendom, we think that before they could realize the truth of the saying, the millennium shall have have come and gone.

If Mr. Hartley's visit would result in promoting the spiritual welfare of our Christian fellow-countrymen, we should certainly welcome it. A nation is made up of all the units composing it. If Christians are benefited by Mr. Hartley's teachings, it tends to the well-being of the whole community. But the Wesleyans are never contented unless they have a fling at the Hindus. In a report published in the "Examiner" of what the Wesleyan Synod did at Jaffna, on the occasion of Mr. Hartley's visit, the following precious passage occurs:— "The quartette walked under a canopy much like to that used when a great *Sami* has a procession." The Hindus are credited with worshipping thirty-three crores of *Samis*. Some of these *Samis* are said to be big, large, or "great", others small, little, or petty. But *all* the *Samis* are taken in procession on *utsavam* days under canopies. Mr. Hartley, not to be out-done even by the great *Samis*, was taken under a canopy similar to what is used when a "great *Sami*" goes in a procession. But the Wesleyans say that our *Samis* have eyes, but do not see, have ears, but do not hear. Can the same thing be said of Mr. Hartley? He has eyes. Did he see? He has ears, Did he hear? We leave Mr. Chittambalam and Mr. Lee, who have complained against the secularization of the Wesleyan clergy, and against their being absorbed in educational, rather than in evangelical, work, to answer the questions.

We see further from the report under review that Mr. Hartley was not able to contain himself, and made the following pregnant observation:—"His welcomes commenced in a modest fashion in the West and the South till they increased in show in the East, but here he was crowned (one of the audience remarked 'aside 'apotheosised.')" Why can't the Wesleyans, then, believe in the apotheosis of the Hindu sages and devotees? All is well that ends well. We are glad to find that our Wesleyan friends are gradually coming to our way of thinking.

## AN INTERESTING FUNCTION.

The awarding of medals to the three successful candidates at the "Bala-Pundit" examination held, under the auspices of the *College of Pundits* Jaffna, took place, on the 25th Ultimo, with great *eclat*, at the Saivite School Bungalow, Mr. C. W. Kathiravelu Pillai, the retired Police Magistrate of Kayts, presiding. Invitations, were distributed far and wide several days before the date of the function, and a large concourse of people from all parts of the Peninsula, Christians and Hindus, attended. The school-house was tastefully decorated for the occasion with wreaths and garlands of flowers and vari-coloured lamps. The hall was festooned with wreaths hung crosswise from one side to the other with graceful bends and undulations. The decorations by means of cloth, flowers, lamps, and ever-greens left nothing to be desired. At six O'clock P. M. when the lamps were lit, the whole bungalow presented a most picturesque appearance worthy of the occasion. Much credit is due to Mr. Kailasapillai, Mr. Vaitialingapillai, Mr. Chuppiramaniapillai and others, not only for the beauty of the decorations, but also for the uniform courtesy with which they received the visitors that evening.

At 6 P. M, the hall began to be thronged with people, and by 7 O'clock, the time appointed for the function, it was filled to overflowing. The large gathering made up of representatives from all sections of the community was a sign of the times, and indicated the interest taken by the people in Tamil education. The function was also unique, being the first of the kind held after the downfall of the native kings, who largely patronized and fostered Tamil literature and learning; at least, the oldest inhabitant could not recall to mind or remember any function similar to the one held that evening. Mr. Kailasapillai and his fellow-workers have earned the undying gratitude of their countrymen by the efforts they have already made, and are making, to improve the status, and encourage the study, of the Tamil language and literature.

The proceedings commenced at about ten minutes past 7 P. M, when Mr. Kathiravelupillai was voted to the chair. The veteran he is, Mr. Kathirevlupillai ably discharged the duties of Chairman His conduct in the chair was most admirable and was marked by considerable tact and skill. On taking the chair, Mr. Kathiravelu pillai called upon *Mr* Kailasapillai, the father and president of the College, to read the report of its operations during the past year, which he proceeded to do amidst deafening cheers. The report was lucid, clear, and couched in the simplest language. It contained a short account of the origin and growth of the Tamil language and literature before the advent of Muhammadans and Europeans to the land of the Tamils, with a brief reference to the three *changams* or Academy of Pundits that flourished under the sway of the ancient Tamil

(*continued in the supplement*)

PRINTED AND PUBLISHED BY P. CARTHIGASAPILLAI FOR THE PROPRIETORS AT THE SAIVAPRAKASA YANTRA OFFICE, JAFFNA.